# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 01.07.2021 supeedsam.com supeedsam@gmail.com







## இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் சீனா

### சிறீதரன் சாடல்



(யாழ்.கீதன்)

இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் செயற்பாடுகளை சீன அரசு செய்து வருகின்றது என சிறீதரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கௌதாரிமுனை பகுதியில் அமைக்கப்பட்டு இருக்கும் சீனாவின் உடைய கடல் அட்டை பண்ணை பார்வையிடுவதற்கு இன்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விஜயமொன்றை

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கில் சீனர்களுக்கு இடமில்லை



### ஆளுநர் அனுராதா ஜஹம்பத் அறிவிப்பு

(மட்டுநிருபர்)

கிழக்கு மாகாணத்தில் சீனர்களுக்கு இடம் இல்லை என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜஹம்பத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மருதமுனைக்கு சிவப்பு எச்சரிக்கை இன்று முதல் முடக்கப்படுகிறது

### இரவு 10 மணி முதல் அமுல்



(ஷினாஸ்)

தற்போது மருதமுனை பிரதேசத்தில் அதிகரித்து வரும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு மருதமுனை பிரதேசத்தை

02 ஆம் பக்கத்தில்...

## இந்து கோயில்களில் வழமையான பூஜைகள் மற்றும் பிரார்த்தனைகள்

(படுவான்பாலகன்)

பொது மக்கள் பங்குகொள்ளாமலும், ஆகக்கூடியது ஐந்து பூசாரிகளின் பங்குபற்றலுடனும் கோயில் பூசாரிகள் மூலம் வழமையான பூஜைகள்

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் தீவிரமடையும் கோரோனா அலை போதுச் சுகாதார பரிசோதகர்கள் களத்தில்



(நூருள் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். அல் அமீன் றிசாடின் வேண்டுகோளுக்கிணங்க பிரயாணக் கட்டுப்பாடு வரையறை

07 ஆம் பக்கத்தில்...


## அமைதி, நீதி,வலுவான நிறுவனங்கள் தோடர்பான கலந்துரையாடல்



'அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்' என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறியீட்டு எண் 16 இன் படி , 'சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்' நிலையான

02 ஆம் பக்கத்தில்...

## மே 18 நினைவேந்தலை நடத்திய 10 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு





(க.ருத்திரன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள கடற்கரையில் மே 18 ஆம் திகதி முள்ளி வாய்க்கால் நிகழ்வினை

02 ஆம் பக்கத்தில்...






## மருதமடு அன்னையின் விழாவுக்காக செல்வோருக்கு ஆன்டிஜென் சோதனை



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு ஆடி மாத பெருவிழாவானது இம்முறை அரசாங்கத்தின் சுகாதார நடைமுறையின் அறிவுரைக்கு அமைவாக மன்னார்

02 ஆம் பக்கத்தில்...

## கால்நடை பண்ணைகளை அமைப்பது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

(ந.குகதர்சன்)



ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் நஞ்சற்ற உற்பத்திற்காக சேதனப் பசளையினை பயன்படுத்தும் திட்டத்திற்கு அமைவாக சேதனப்பசளையினை உற்பத்தி செய்வதற்காக

02 ஆம் பக்கத்தில்...











## மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை கட்டாயமாக்கப்பட்டது

(காந்தன்)

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை கட்டாயமாக அமுல்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தில் தீவிர கவனம்

02 ஆம் பக்கத்தில்...

## அரசாங்கத்தின் மீது பாரிய எதிர்ப்பு அலை



(ராஜ்)

ஜனாதிபதியின் நாட்டு மக்களுக்கான உரையின் பின்னர் மக்கள் அரசாங்கத்தின்

02 ஆம் பக்கத்தில்...











## யாழ்.இந்துக் கல்லூரி மாணவனின் சாதனை



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்கும் நக்கீரன் மகழினியன் என்ற 15 வயது மாணவன் வாட்ஸ் எப் மற்றும் வைபர் ஆகிய செயலிகளுக்கு

07 ஆம் பக்கத்தில்...

# கால்நடை பண்ணைகளை அமைப்பது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

கால்நடை பண்ணைகளை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக நஞ்சற்ற உணவை எவ்வாறு உற்பத்தி செய்வது, அதற்கான சேதனை உரத்தினை உற்பத்தி செய்வதற்கான பண்ணையை அமைப்பதற்கான நடைமுறைகள் குறித்து ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அவர்களது தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கால்நடைகள் இராஜாங்க அமைச்சர் டி.பீ.ஹேரத் கலந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், அமைச்சின் செயலாளர்கள், கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், மில்கோ நிறுவனத்தின் உயரதிகாரிகள், அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஶ்ரீகாந்த், மட்டக்களப்பு மற்றும் அம்பாரை மாவட்ட செயலகங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட விடயத்துடன் தொடர்புடைய ஏனைய திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர். கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் கால்நடை பண்ணைகளை அமைப்பது தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது. குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இதனை அமைப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது மாதிரி பண்ணைகளை அமைத்து அதிலிருந்து பால் உற்பத்தியை எவ்வாறு அதிகரிக்கச் செய்வது, கால்நடைகளுக்கான உணவினை அதிலேயே உற்பத்திசெய்தல், பண்ணையிலிருந்து சேதனப்பசளைகளை உற்பத்திசெய்து அதனை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வது குறித்து ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு, களுவாஞ்சிகுடி, கொக்கட்டிச்சோலை, கரடியனாறு, கிரான், மயிலத்தமடு ஆகிய பகுதிகளிலும் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை நகர், உகன, திருக்கோவில், தெகியத்தன்கண்டி ஆகிய பகுதிகளிலும் பண்ணைகளை அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சுமார் மூன்று இலட்சம் கால்நடைகள் காணப்படும் நிலையில் அவற்றினையும் உச்ச நிலையில் பயன்படுத்துதல் குறித்தும், புதிய கால்நடை பண்ணைகளை அமைத்தல் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

# கிழக்கில் சீனர்களுக்கு இடமில்லை

தொடர்ந்தும் பதில் வழங்கிய அவர்,

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் நான் விசேடமாக அவதானம் செலுத்தி வருகின்றேன். கிழக்கு மாகாணத்தில் இருக்கிற அனைத்து இடங்களிலும் விவசாயிகள் மீனவர்கள் பாமர மக்கள் அவர்களுடைய பொருளாதாரத்தை வளர்த்து அவர்களை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு செல்வதே எனது நோக்கமாக செயற்பட்டுக் கொண்டு வருகின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகளும் மீனவர்களும் இல்லை சாதாரண பாமர மக்களும் தங்களது கால்களில் நிற்கும் ஒரு நிலை உருவாகுமாக இருந்தால் சீனர்கள் இல்லை எந்த நாட்டவரும் இங்கே வந்து தொழில் செய்ய வேண்டிய தேவைப்பாடு கிடையாது.

ஆகவே எமது மாகாணத்தில் சாதாரண மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவது தான் எனது நோக்கம். கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் சீனர்களை பற்றி பயப்பட எதுவுமே இல்லை என தெரிவித்துள்ளார்.

# அமைதி, நீதி,வலுவான நிறுவனங்கள்

அபிவிருத்திக்கு அமைதியான மற்றும் முழுமையான சமுதாயத்தை உருவாக்குவதையும், அனைவருக்கும் நீதிக்கான வாய்ப்பையும், இலங்கையில் அனைத்து மட்டங்களிலும் பொறுப்புடன் கடமையாற்றும் முழுமையான நிறுவனங்களை திறம்பட உருவாக்குவதையும் ஊக்குவிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் நீதியமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலிசப்ரி அவர்களின் தலைமையில் நீதி அமைச்சு மற்றும் நிலையான அபிவிருத்தி சபை அனுசரணையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில்,

'அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்' என்ற கருத்தில் நிலையான அபிவிருத்திக்கான அளவுகோல்களை அடைவதற்கும், ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும், நீதித்துறையுடன் தொடர்புடைய எதிர்கால திட்டங்களை வகுத்து ஒருங்கிணைப்பதற்காகவும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை பெறுவதற்கான சட்டதிருத்தம் தொடர்பான முயற்சிகளைத் தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது.

இக் கலந்துரையாடலில் நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே மாயதுன்னே, நிலையான அபிவிருத்தி சபை நிர்வாக இயக்குநர் திருமதி சமீந்தி சப்ரமடு உட்பட பல அரசு நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.






# அரசாங்கத்தின் மீது பாரிய எதிர்ப்பு அலை

மீது வைத்திருந்த நம்பிக்கை முழுமையாக இல்லாது போயுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகள் காரணமாக நாட்டில் பாரிய அரச எதிர்ப்பு அலையொன்று உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தவறுகளை திருத்திக் கொள்ளவில்லை என்றால், ஏனைய சக்திகளுடன் இணைந்து ஆட்சி மாற்றத்தை உருவாக்கும் நேரடியான போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என்றும் அதனைத் தவிர நாட்டு மக்களைப் பாதுகாக்க மாற்றுவழி கிடையாது எனவும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். நாடு பலவிதமான நெருக்கடிகளை தொடர்ச்சியாக சந்தித்து வருகின்றது. நாட்டில் தற்போது 'பொசிடிவ்'ஆக இருப்பது கொவிட் ஒன்று மட்டுமே. ஏனைய சகல விடயங்களும் நெருக்கடியில் உள்ளது.

அரசாங்கம் நாட்டின் நிலைமைகளை சரியாக கையாள முடியாது, பலவீன முற்றுள்ளமை தெளிவாகிறது. ஆனால், கொவிட் 19 வைரஸ் பரவலை சாட்டாக வைத்துக்கொண்டு அரசாங்கம், அதன் இனவாத செயற்பாடுகளை முன்னெடுப்பதை கைவிடுவதாக தெரியவில்லை என்று அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கில் தொல்லியல் பகுதிகள் என்ற பெயரில் வழமையை விடவும் வேகமாக நில ஆக்கிரமிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றதாகவும் சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# இந்து கோயில்களில் வழமையான பூஜைகள்

மற்றும் பிரார்த்தனைகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன மட்டக்களப்பு அரச அதிபருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

வருடாந்த பூஜை திருவிழாக்கள் பொது மக்களின் பங்குபற்றுதலுடன் நடத்தப்பட முடியாது. எவ்வாறாயினும், ஆகக்கூடியது 15 சபை உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன், பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் திருவிழாக்கல் நடத்தப்படலாம் என அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாணங்களுக்கு இடையிலான பயணத்

செலுத்தப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

மாகாண எல்லைகளை கடக்க முயற்சிக்கும் வாகனங்கள் தொடர்ந்தும் திருப்பி அனுப்பப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு மட்டுமே மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க அனுமதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, மாகாணங்களுக்கு இடையிலான தேவையற்ற பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவ்வாறு பயணிப்போர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.






# மருதமடு அன்னையின் விழாவுக்காக செல்வோருக்கு ஆன்டிஜென்

மறைமாவட்ட ஆயர் தலைமையில் மூன்று ஆயர்கள் இணைந்து இவ் விழா கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுக்க இருக்கின்றனர். அத்துடன் மருதமடு அன்னையின் விழா அன்று மடுவுக்கு செல்வோருக்கான கொரோனா ஆன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்டத்தின் யாத்திரிகர் ஸ்தலமான மருதமடு அன்னையின் ஆடி மாத பெருவிழாவானது கடந்த 23 ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் இரண்டாம் திகதி நிறைவுபெற இருக்கின்றது.

கடந்த காலங்களில் இவ் பெருவிழாவுக்கு வருடந்தோறும் இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் சுமார் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொள்வது வழமையாகும்.

ஆனால் இம்முறை கொரோனா தொற்றுநோய் இலங்கையில் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து இவ் நோயை கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசானது இறுக்கமான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து வருவதனால் அரச சுகாதார நடைமுறைகளுக்கமைய ஒரு நிகழ்வில் முப்பது நபர்களுக்கு குறைவானவர்களே கலந்துகொள்ள முடியும்.

இதன் நடைமுறைகளுக்கு அமையவே இவ் விழாவும் இம்முறை இடம்பெறுகின்றது. 02.07.2021 வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கும் இவ் மருதமடு அன்னையின் பெருவிழா காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தலைமையில் குருணாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹரல்ட் அன்ரனி ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரன் றஞ்சித் ஆண்டகை ஆகியோர் கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுப்பர்.

இதைத் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட முறையில் மன்னார் மறைமாவட்டத்தின் நான்கு மறைகோட்ட ரீதியாக ஆறு திருப்பலிகள் ஒப்புக்கொடுப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் கலந்து கொள்ள இருக்கும் பக்தர்களின் பெயர்கள் பங்கு தந்தையர்களால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

இவ் மருதமடு அன்னையின் பெருவிழா அன்று அங்கு நடைபெறும் திருப்பலிகளில் பங்குபற்றச் செல்லும் அனைவருக்கும் கொரோனா நோய்க்கான ஆன்டிஜென் பரிசோதனை புதன்கிழமை (30.06.2021) சுகாதார சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு நோய் தொற்று இல்லாதவர்களுக்கு மட்டுமே அத்தாட்சப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் இம்முறை மடு ஆலய பகுதிக்குள் எந்தவித கடைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் அங்கு இயங்கிவரும் ஒரேயொரு சிற்றுண்டிச்சாலைக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மே 18 நினைவேந்தலை நடத்திய 10 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றினால் ஏற்கனவே திகதி இடப்பட்டதன் அடிப்படையில் நேற்று புதன் கிழமை வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதி மன்றில் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 2 பெண்கள் உட்பட 10 பேரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதவான் நீதிமன்றம் வாழைச்சேனை நீதிபதி எம்.எச்.எம்.பசில் கட்டளை பிறப்பித்துள்ளார்.

கடந்த மே 18 ஆம் திகதி செவ்வாய் கிழமை கிரான் கடற்கரையில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தலை அனுஸ்டித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஏற்பாட்டாளரான குருசுமுத்து வி.லவக்குமார் உட்பட 9 பேரும் கல்குடா பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவ் வழக்கில் சந்தேக நபர்கள் சார்பில் மூத்த சட்டத்தரணி ரட்ணவேல் தலைமையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரான சட்டத்தரணி கே.சுகாஸ் உட்பட சட்டத்தரணிகளான ரம்சின், ஜெயசிங்கம்,நிரஞ்சன்,ரணித்தா,சித்திக் ஆகியோர்கள் ஆஜராகியிருந்தனர்.

இவ் வழக்கு தொடர்பாக சட்டத்தரணி கே.சுகாஸ் பின்வருமாறு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் சமர்ப்பணமொன்றை மேற்கொள்வதற்கான அனுமதியொன்றை நீதிமன்றில் கோரியிருந்ததாகவும்,எதிர்வரும் 13ம் திகதி அதற்கான அனுமதி கிடைத்திருப்பதாகவும்,அன்றைய தினம் சந்தேக நபர்களின் சார்பில் சமர்ப்பணம் மேற்கொள்ளவுள்ளதாகவும்,அந்த சமர்ப்பணத்திற்கு மான்பு மிகு நீதிமன்றம் வழங்கும் கட்டளையைப் பொறுத்து அடுத்த கட்டமாக நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இலங்கையின் உயர் நீதி மன்றத்திலே மூத்த சட்டத்தரணி ரட்ணவேல் தலைமையில் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்யவிருப்பதாக' இவ்வாறு தமது கருத்தினை தெரிவித்தார்.

# மருதமுனைக்கு சிவப்பு எச்சரிக்கை இன்று முதல் முடக்கப்படுகிறது

இன்று (1) முதல் முழுமையாக முடக்க நேற்று (30) பகல் நடைபெற்ற உயர்மட்டக். கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம் ரக்கீப் தலைமையில் மாநகர முதல்வர் அலுவலகத்தில் நடைபெற்ற உயர் மட்டக்கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இன்று இரவு முதல் மருதமுனை பிரதேசத்திற்கு வெளியில் இருந்து பொதுமக்கள் உட்பிரவேசிப்பதும், மருதமுனையில் இருந்து வெளியேறுவதும் முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் முழுமையான சுகாதார வழிமுறைகளை பின்பற்றி மருதமுனை பிரதேசத்தில் இருந்து கொரோனாவினை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கோட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ் உயர்மட்டக் கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப் ரஹ்மான், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம் அஸ்மி, கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான ஏ.ஆர்.எம்.அமீர், எம்.எஸ்.உமர் அலி, பீ.எம்.சிபான், கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்சத் காரியப்பர், வைத்தியர்கள், மருதமுனை வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், மருதமுனை உலமா சபை பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.






# இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் சீனா

மேற்கொண்டிருந்தார். அதன்போதே அவர் மேற்குறிப்பிட்டவாறு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அண்மைய நாட்களிலே சர்வதேச ரீதியாக பேசப்படும் ஓர் விடயமாக இலங்கையினுடைய தென் பகுதியிலே சீனாவின் உடைய அகலக் கால்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது வடக்கு பகுதியில் குறிப்பாக நெடுந்தீவு அனலைதீவு நயினாதீவுகளில் ஆதிக்கத்தை செலுத்தியுள்ள நிலையில் தற்பொழுது யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் கடலட்டை குஞ்சுகளை வளர்ப்பதாக கூறி உருவாக்கப்பட்ட அட்டை பண்ணை ஆனது தற்போது கிளிநொச்சியின் மூலை எல்லையில் கௌதாரிமுனை என்னும் இடத்தில் எந்த அனுமதியும் இன்றி அந்த அட்டை பண்ணையை நடாத்தி வருகின்றார்கள்.

அத்துடன் யாழ் பாசையூர் மீனவர்கள் கிளிநொச்சி கௌதாரிமுனை மீனவர்கள் கடலட்டை வளர்ப்பிற்கான முன் வைத்த உரிமங்கள் மறுக்கப்பட்ட நிலையில் இப்பொழுது சீனர்கள் செய்து வருவதுடன் இயற்கையாகவே இக்கடலில் வளர்கின்ற கடல் அட்டைகளை நிராகரித்து செயற்கையாக பிரோய்லர் கோழிகளுக்கு வைக்கும் மருந்துகளை போல் கடலட்டைகளுக்கு வைத்து விரைவான வளர்ச்சியை அடைய வைத்து அதனை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையில் சீனர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றினை சாதாரணமாகப் பார்க்கும் போது சீனாவிற்கு கடல் அட்டை ஏற்றுமதி செய்யும் இடமாகத்தான் தெரியும் ஆனால் இதன் பின் பாரிய அரசியல் செயற்பாடுகள் உள்ளன.

சீனா தற்பொழுது இலங்கையில் கால்பதித்துள்ள இடங்கள் அனைத்தும் முக்கிய கேந்திர நிலையங்கள் ஆகவே உள்ளன.

இவ்வாறான விடயம் ஈழத்தமிழர்களுக்கு மாத்திரம் அல்லாது அண்மையில் உள்ள இந்தியாவிற்கு கூட ஓர் பாரிய அச்சுறுத்தலை வழங்குகின்ற செயற்பாடாக காணப்படுகின்றது.

அத்துடன் இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கின்ற மற்றும் இந்தியாவை கண்காணிக்கின்ற செயற்பாடுகளை துரிதமாக சீன அரசு மேற்கொண்டு வருகின்றது அதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்பினை வழங்குகின்றது என குறிப்பிட்டார்.

# SwissLife Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...



Herr Krishnasamy
**THILEEPAN**
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
**Swiss Life Select AG**
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.



மருத்துவ காப்புறுதி



வாகனக் காப்புறுதி



குழந்தைகளுக்கான காப்புறுதி



ஆயுட் காப்புறுதி



சட்டக் காப்புறுதி

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

# உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923

n.uthayakumar1981@gmail.com

# SHELVA SWISS

YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் **0.62%** தொடக்கம்

**10%** இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

# SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

**பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்**

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

# MATHE BILDUNGSZENTRUM
# கணித கற்கைநெறி மையம்

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா -வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# Aaran Ayurveda
## & Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# கிழக்கு மாகாண பாடசாலைகளில் சேதனப் பசளை மூலமான தோட்டங்களை அமைக்க ஆளுநர் அறிவுரை



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில், பாடசாலை காலம் தொடங்கிய பின்னர் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் ஒரு மாதிரி சேதனப் பசளை தோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்க ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷ எடுத்த முடிவை உண்மையாக்குவதற்கு இது செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆளுநர் கூறினார். இந்த புதிய கருத்தை மாணவர்களின் இதயங்களில் அறிமுகப்படுத்துவதன் மூலம், நாட்டின் எதிர்கால தலைமுறை நிச்சயமாக நிலையான விவசாயத்தை நோக்கி நகரும் என்று அவர் மேலும் கூறினார்.

பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்னர் இது குறித்து அனைத்து அதிபர்களுக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

மேலும், கூறுகையில், சேதனப் பசளை செய்கை விவசாயம் குறித்து மாணவர்களுக்கு கற்பிக்க பாடசாலை பாடத்திட்டத்தில் வாரத்திற்கு ஒரு காலமாவது சேர்க்கப்பட வேண்டும் என்றார்.

குறித்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதமச் செயலாளர் துசித பி. வனிகசிங்க, மாகாண கல்வியமைச்சின் செயலாளர் கிறிஸ்டி லால் பெர்னாண்டோ, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி. மதநாயக்க மற்றும் மாகாண கல்வி பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இந்து சமய விவகாரங்கள் தொடர்பான விசேட கலந்துரையடல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இலங்கையில் இந்து சமய விவகாரங்கள் தொடர்பான விசேட கலந்துரையடல் ஒன்று கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது.

இக்கலந்துரையடலில் பிரதமரின் இந்து மத விவகார இணைப்பாளர் சிவ ஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கொவிட் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இந்து சமய கலாசார செயற்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் அவை தொடர்பாக எடுக்க வேண்டிய முக்கிய செயற்பாடுகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. மேலும் இலங்கையில் இந்து சமய கலாசார செயற்பாடுகளை மேம்படுத்தும் பல்வேறு எதிர்கால திட்டங்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மலையகம் மற்றும் தென்பகுதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள ஆலயங்கள் அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்தி, இந்து சமய அறநெறிக் கல்வியினை மேம்படுத்தி விரிவாக்குவதற்கான துரித திட்டங்கள் , இந்துக் குருமாரிற்கான பயிற்சி உட்பட நலத்திட்டங்கள், எதிர்காலத்தில் இலங்கையிலிருந்து இந்தியா போன்ற நாடுகளிற்கு புனித யாத்திரை செல்லும் பக்தர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டங்கள் , இலங்கையில் மத நல்லிணக்கத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் மூன்றாவது உலக இந்து மாநாட்டினை நடாத்துதல், இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களின் மூலம் முன்னெடுக்கும் சமூக நல செயற்பாடுகளை ஊக்குவித்தல், இந்துப் பண்பாட்டு நிதியத்தின் செயற்பாடுகளை மேலும் விரிவாக்கும் திட்டங்கள் மற்றும் தமிழ்க் கலைகளை மேம்படுத்தும் திட்டங்கள் கலைஞர்களை பாராட்டி ஊக்கப்படுத்தும் திட்டங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விடயங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதமரும் புத்த சாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமாகிய மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி தேவையான அமைச்சரவைப் பத்திரங்களை பிரதமரூடாக சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பொகவந்தலாவ,அம்பகமுவ பொது சுகாதார வைத்திய பிரிவுகளில் 57 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம்

(க.கிஷாந்தன்)

பொகவந்தலாவ பொதுசுகாதார வைத்திய பிரிவு மற்றும் அம்பகமுவ பொதுசுகாதார வைத்திய பிரிவுகளுக்குட்பட்ட பகுதியில் 57 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவ சுகாதாரப் பிரிவில் வெளியான பி.சி.ஆர் முடிவுகளின் படி 42 பேரும் அம்பகமுவ பொதுசுகாதார பிரிவுக்கு உட்பட்ட அட்டன் சமனலகம, அட்டன் சுற்றுப்புற வீதி, புறுட் ஹில், கந்தையா கட்டடம் உள்ளிட்ட பகுதிகளில் 15 பேரும் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அட்டன் பொது சுகாதார பரிசோதகர் ராமையா பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அட்டன் பகுதியில் தொற்றாளர்களுடன் தொடர்பை பேணிய 16 பேர் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அட்டன் பொதுசுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

# அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைக்குமாறு நாவலப்பிட்டியில் போராட்டம்

(க.கிஷாந்தன்)



மக்கள் விடுதலை முன்னணியால் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களில் ஓர் அங்கமாக நாவலப்பிட்டிய நகரிலும் நேற்று எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

எரிபொருட்களின் விலையைக் குறைக்குமாறும், விவசாயிகளுக்கு உரம் வழங்குமாறும், அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியே இப்போராட்டம் இடம்பெற்றது.

கொரோனாப் பிரச்சினை, பயணக் கட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்களால் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மரத்தில் இருந்து விழுந்தனை மாடு முட்டுவது போல எரிபொருட்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் மென்மேலும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர். எனவே, மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் எரிபொருட்களின் விலை குறைக்கப்படவேண்டும்.

அதேபோல எவ்வித மாற்று ஏற்பாடுகளும் இன்றி இரசாயன உரப்பயன்பாட்டுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. விளைச்சல்களும் அழிவடைந்துவருகின்றன. எனவே, உரத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். ஜே.வி.பியின் செயற்பாட்டாளர்களும், மக்களும் இப்போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

# மூதூர் ஹபீர் நகர் பகுதியில் அன்றாட வசதிகள் இன்றி சிரமம்படும் மக்கள்

(எப்.முபாரக்)



திருகோணாமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஹபீர் நகர் பகுதியில் அன்றாட வசதிகள் இன்றி பெரிதும் சிரமம்பட்டு வருவதாக அப்பகுதியில் வசிப்போர் தெரிவிக்கின்றனர்.

மின்சாரம் மற்றும் மலசல கூட வசதிகள் இல்லாமல் சிரமம்படுவதாகவும் அரசினால் வழங்கப்படுகின்ற எந்தவிதமான நன்மைகளும் தமக்கு கிடைப்பதில்லை எனவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

தகரக் கொட்டகைகளினால் அமைக்கப்பட்ட வீடுகளில் தாம் வசித்து வருவதாகவும் மழை காலங்களில் நீர் வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கிராம அதிகாரி மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் தம்மை கவனிப்பதில்லை எனவும் அரசினால் எந்த கொடுப்பனவுகளும் கிடைக்கவில்லை எனவும் தொழில் நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

தமக்கு குடியிருப்பதற்கான வீடு ஒன்றினை கட்டித் தருமாறும் வாழ்வாதாரத்திற்கான உதவிகளை ஏற்படுத்தி தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் நிவாரண உதவி

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோணா வைரஸ் பரவல் காரணமாக போக்குவரத்து தடைப்படுத்தப்பட்ட வேளை அன்றாட உணவுக்காக சிரமப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டது

பேரவையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் இரண்டு இலட்சம் ரூபாய் நிதியுதவியை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கு வழங்கி வைத்தது.








இதனடிப்படையில் கிரான்குளம், செட்டிபாளையம், களுவன்கேணி உட்பட்ட கிராமங்களுக்கு பேரவையினால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பேரவையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில் பேரவையின் செயலாளர் சா.மதிசுதன், பேரவையின் பொருளாளர் ந.புவனசுந்தரம், பேரவையின் இணைப்பாளர் ச.விஜிதரன் ஆகியோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வைத்தனர்.







கோடைகால சுற்றுலா
கொண்டாட்டம்
இத்தாலி
2021
பயணம் வாழ்க்கையின் வழிகாட்டி...
24.07.2021 முதல்
30.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels


நல்லூர்
சுவையகம்
உங்கள் இல்ல விழாக்கள் அனைத்தையும் சிறப்பித்திட
எங்கள் சைவ அசைவ உணவுகளைக்கொண்டு
மெருகூட்டுங்கள்.
Party Service
சுவிஸ் முழுவதிற்கும் எமது சேவை
மலிவு, தரம், நம்பிக்கை
எங்கள் விளம்பத்தை உடனுக்குடன் தெரிந்து கொள்வதிற்கு
எங்கள் Fb பக்கத்தை லைக் செய்யுங்கள். Nallur Travels
Nallur Angadi Murtenstrasse 269, 3027 Bern.
031 991 85 31 | 079 964 04 74


கோடைகால
சுற்றுலா கொண்டாட்டம்
10.07.2021 முதல் 16.07.2021 வரை 31.07.2021 முதல் 6.08.2021 வரை
Amazing
Spain
it begins with the
pepole...
பேருந்து
புறப்படும் இடங்கள்
St Galan | Zurich | Baden
Aarau | Bern | Freiburg
Lausanne & Geneva.
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels
031 991 85 31
079 964 04 74


2021
கோடைகால
சுற்றுலா
கொண்டாட்டம்
Wonderful
Portugal
17.07.2021 முதல்
23.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels




# தீர்வு முன் மொழிவுகளை வலியுறுத்தும் கடமை தமிழர் தலைமைக்கு இருக்கிறது

## கலாநிதி நல்லையா குமரகுருபரன்



(துறையூர் தாஸன்)

பாராளுமன்ற பேச்சோடும் பத்திரிகை அறிக்கைகளோடும் மட்டும் வரையறுக்கப்பட்டதாகவே கூட்டமைப்பினரை மக்கள் காண்கின்றார்கள் என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கடந்த கால செயற்பாடுகளை எவ்வாறு பார்க்கிறீர்கள் என வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்..

அவர் மேலும் கூறுகையில்,

யுத்தத்தின் விளைவான மீள்குடியேற்றம், வீடுகள் கட்டுமானம், இளைஞர் வேலைவாய்ப்பு, அபிவிருத்தி என்பவற்றுக்கான முக்கியத்துவம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கொடுக்கப்படவில்லை என்பதை யாவரும் அறிவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமிழந்ததிற்கு, கூட்டமைப்பை தனி ஒரு கட்சி ஆதிக்கத்தின் கீழ் கொணர்ந்த மூத்த தலைமை மறுபக்கம் அதை கட்டுப்படுத்த வல்ல சக்தி ஒரு மூத்தோர் குழாம் இல்லாமை. ஒருமைப்பாட்டை பேண, ஒன்றுபட வைக்க வல்லமை அல்லது சாணக்கியமின்றி தமது சுய தலைமையை வளர்க்க கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய கட்சிகளும் பிரதான காரணமாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாகி மட்டுமல்ல, தமிழர் விடுதலை கூட்டணியை தமிழரசுத் தந்தை செல்வா ஜீ ஜீ பொன்னம்பலத்தையும் தலைவராக்கி உருவாக்கியும், பின்னர் போராட்டம் நடத்தியும், யுத்தம் இடம்பெற்றும் தமிழின அபிலாசை உரிமைகள் கிடைக்கப் பெறவில்லை.

தமிழ்மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கிய அரசியல் தீர்வு உருவாவதற்கான முன் மொழிவுகளை முன்னுரிமை கொடுத்து வலியுறுத்தும் கடமை தமிழர் தலைமைக்கு இருக்கிறது. ஆக அரசியல் தீர்வு, அபிவிருத்தி இரண்டுக்குமான முன்னெடுப்புக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றார்.

# சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் வழுங்கப்படும் முக்கிய அறிவித்தல்

(ந.குகதர்சன்)

கொரணா பரவல் தொடர்பாக எமது பகுதி வாழ் மக்களுக்கு சுமார் 18 மாதங்களாக பல்வேறுபட்ட அறிவுரைகள் பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு தேவையான அனைத்து வழிகாட்டல்களும் எமது அலுவலகத்துடன் இணைந்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவியுடன் ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று ஏறாவூர்சுகாதாரவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பொதுமக்களின் அண்மைக்கால பொறுப்பற்ற தனிநபர் செயற்பாடுகள் அனைத்து நிறுவனங்களின் செயற்பாடுகள்,தியாகங்களை அலட்சியப்படுத்தும் தன்மையில் அமைகின்றது.

அண்மைய நாட்களில் பரவுகை வேகமும் இறப்பு வீதமும் எதிர்பாராத வகையில் எமது சமூகத்தில் அதிகரித்து எம்முடன் ஒன்றாக வாழ்ந்த அன்பான உறவுகளை இழந்து தவிப்பதற்கும் வைத்தியசாலைகளில் எந்த ஒரு உறவின் உதவியுமன்றி அவசர சிகிச்சை பிரிவுகளில் கண்கானாமல் இயந்திரங்களின் உதவியுடன் உயிரினை தக்கவைத்த வண்ணம் சொல்லொண்ணா துயரங்களை அனுபவித்து வருவதற்கும் காரணமாக அமைகின்றது.

தற்போது இதன் தாக்கம் எந்நேரமும் உயிர் இழப்பினை வயது வேறுபாடின்றி ஏற்படுத்தும் வகையில் வீரியத்துடன் அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றமையால்

நோய்ப் பரவல் தொடர்பாக எதிர்மறையாக சிந்திக்கும் சிந்தனை சக்தியில் முரன்பாடு உள்ளவர்களின் செயற்பாடுகளால் அன்றாடம் வைத்தியசாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் உறவுகள் படுகின்ற அவஸ்தைக்கு பொறுப்பற்ற நபர்களின் செயற்பாடுகள் எந்த வகையிலும் துணை புரியாது என்பதனை மனதில் கொள்ளுங்கள்.

தொற்று ஏற்படாமல் பாதுகாப்பாக இருப்பதுதான் எமக்கும் குடும்பத்துக்கும் சமுகத்துக்கும் செய்யும் பாரிய உதவியாகும்.

எதிர்பாராத மனித உயிர் இழப்புகளுக்கு இடையில் எமது அலட்சிய தன்மையால் கொரணா பரவி எமது உறவுகளை பாதிக்க செய்வதற்கு நாம் இவ்வுலகில் மாத்திரமல்ல மறு உலகிலும் பொறுப்பு கூறியே ஆக வேண்டும்.

தற்போதைய நிலையில் அரசாங்கத்தினால் நோய் பரவுவதற்கு சாதகமான அதிகமான செயற்பாடுகள் எமது அன்றாட மார்க்கக் கடமை உட்பட பல்வேறு நல்லமல்களை கூட தவிர்ந்து கொண்டுள்ள போதிலும் எமது தேவையற்ற ஒன்றுகூடல்கள் ,அலட்சியமான செயற்பாடுகள் விரைவாக தொற்று அதிகரிப்பதற்கு சாதகமாக அமைகின்றது .

உடல், உள ,பொருளாதார ரீதியாக பல்வேறு சவால்களை அனுபவித்து வருகின்ற நாம் இதன் பிறகும் எமது நடத்தை ரீதியாக பாரிய மாற்றத்தை ஏற்படுத்தாத வகையில் எமது கண் முன்னே உலாவுகின்ற அன்பான உறவுகளை இதற்கு பழியாக்குவதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

குறுகிய நிலப்பரப்பில் செறிந்து வாழ்கின்றதுடன் வழமையான செயற்பாடுகளின் ஊடாக அதிகமான உறவுச்சங்கிலியை உள்ளடக்கியுள்ளதால்

கட்டுப்பாட்டு நடவடிக்கையில் தனி ஒவ்வொருவரும் அலட்சியமாக செயற்படுகின்ற போது தெரிந்துகொண்டே இதன் பரவல் வீதம் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைகின்றது.

எனவே அன்பான பொதுமக்களே உங்களிடம் வினயமாக வேண்டிக் கொள்வது.

1. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தேவையற்ற வகையில் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம்.

2.அத்தியாவசிய தேவைக்கு ஒருவர் மாத்திரம் பாதுகாப்பான முறையில் சென்று வாருங்கள்.வெளியாகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முறையான முகக் கவசம் சமூக இடைவெளியினை கட்டாயம் பின்பற்றுங்கள்

3. வீட்டில் எவரேனும் காய்ச்சல், தொண்டை நோ ,சுவாசிப்பதில் சிரமம் போன்ற நோய் அறிகுறிகள் ஏதும் காணப்படுமாயின் காலதாமதமின்றி வைத்தியசாலைக்கு செல்லுங்கள்.

4.தேவையற்ற ஒன்று கூடல்கள் களியாட்ட நிகழ்வுகளில் தவிர்ந்து கொள்ளுங்கள்

5.கொரணா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெறுபவர்கள்,தனிமைப் படுத்தப்பட்டவர்களுக்கு இயன்ற உதவி ஒத்துழைப்புகளை வழங்குங்கள்.

இவ்விடயங்களில் முழுமனதுடன் செயற்பட்டு எமது பிரதேசத்தில் இருந்து இப்பாரிய தொற்றை முற்றாக கட்டுப்படுத்துவதற்கும் உயிர் இழப்புகளை தடுப்பதற்கும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

# எதிர்க்கட்சியினரின் குரல்களை அடக்கி ஒடுக்கி இராணுவ ஆட்சிக்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகிறது

## கோவிந்தன் கருணாகரம்



(துறையூர் சஞ்சயன்)

சீனாவில் எதிர்க்கட்சியில்லாத ஆட்சிமுறை இருப்பதை போல எதிர்க்கட்சியினரின் குரல்களை நசுக்கி, அடக்கி ஒடுக்கி இராணுவ ஆட்சி முறைமைக்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகிறது என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைச் செயற்பாடுகள் ஒரு பக்கச் சார்பாகவே பார்க்கப்படுகிறது. இலங்கை சுதந்திரமடைந்த காலமிருந்து மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள், ஆட்சியாளர்களுக்குள்ளேயே அரசியல் பழிவாங்கல்களை தொடராக செய்துகொண்டு இருக்கிறார்கள்.

1977 ஆம் ஆண்டு 5/6 மிகப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்த ஜெ.ஆர். ஜெயவர்த்தன ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையை பறித்திருந்தார். அதே போல் இந்நாட்டில் ஆட்சி அரசு மாற்றங்கள் ஏற்படும்போது உயர்படை, அரச நிர்வாக அதிகாரிகள் என மாறி மாறி ஆட்சியாளர்களுக்குச் சாதகமானவர்களை ஆட்சி நிர்வாகத்திற்குக் கொண்டு வருவதற்காக இன்னுமொருவரைப் பழிவாங்கிய காலகட்டங்கள் கடந்த காலங்களிலே இடம்பெற்றது.

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ்மக்கள் அரசியல் ரீதியாக தொடர்ச்சியாக பழிவாங்கப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டதனால் தமிழ்மக்களை நாட்டின் இரண்டாம் தர பிரஜைகளாக கணித்தது மாத்திரமல்லாமல், தமிழர்களின் பூர்வீக தமிழ் மொழியை அரச கரும மொழியில் இருந்து அகற்றியது முதல் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்ட இனக்கலவர இன அழிப்புகள் மிகவும் மோசமான நிலைமைக்குத் தமிழ்மக்களை தள்ளிவிட்டது.

மேலும் 1983 ஆம் ஆண்டு யூலைக் கலவரம் தமிழ்மக்களின் ஆயுதப் போராட்டத்தை வீரியம் அடையச் செய்தது. அதற்கு மேலாக வடக்கு கிழக்கிலே குடியேற்றங்களைச் செய்து தமிழ்மக்களது நிலங்களை அபகரித்து வடக்கு கிழக்கிலே சிங்கள பெரும்பான்மையினத்தை குடியமர்த்தி, தமிழர்களது இனப்பரம்பலை குறைக்கும் வேலைகளையும் ஆட்சியரசுகள் தொடர்ச்சியாக செய்தது.

அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் 1921 ஆம் ஆண்டிலிருந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 01 வீதம் கூட சிங்களவர்கள் இல்லாத கிழக்கில், சுதந்திரத்திற்கு பின்பு கல்லோயா குடியேற்றம், கந்தளாய் சேருவல குடியேற்றம் என்று பெரும்பான்மையின மக்களை குடியேற்றிதனால் இன்றைக்கு கிட்டத்தட்ட 25 வீதம் சிங்கள மக்கள் கிழக்கிலே வாழ்கிறார்கள்.

சிங்கள பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினரையோ பாராளுமன்ற உறுப்பினரையோ கொண்டு வரக்கூடிய நிலைமைக்கு, திட்டமிட்ட குடியேற்றங்கள் வழி வகுக்கின்றன.

கிழக்கில் மாத்திரமல்ல பூர்வீகமாக இணைந்திருந்த வடக்குக் கிழக்கை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலே மணலாறு என்ற தமிழ் பிரதேசத்தை வெலிஓயா என்ற சிங்களப் பிரதேசமாக பிரகடனப்படுத்தி இன்று நிரந்தரமாக பூகோள நிலத்தொடர்பு ரீதியில் வடக்கையும் கிழக்கையும் பிரித்து வைத்திருக்கக்கூடிய ஒரு நிலைமையும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

அதற்கும் மேலாக தொல்பொருள் போர்வையில் பொத்துவில் முதல் பருத்தித்துறை வரை ஒவ்வொரு பிரதேசங்களாக பௌத்த சின்னங்கள் இருப்பதாக அடையாளப்படுத்தி நூற்றுக்கணக்கான ஏக்கர்களை கையகப்படுத்தும் ஏற்பாடுகளும் இடம்பெறுகிறது.

கிழக்கில் மாத்திரமல்ல வடக்கு முல்லைத்தீவு குருந்தூர்மலை, யாழ்ப்பாணம் நிலாவரை போன்ற பிரதேசங்களிலே தொல்லியல் போர்வையில் அரசியல் பழிவாங்கல் தொடர்ச்சியாக இடம்பெறுகிறது என்கிறார்.

# கிண்ணியாவில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐவர் கைது

(இஃஜாஸ் ஏ பரீட்)

கிண்ணியா பொலிஸ் பிரிவில், மணலாறு மற்றும் கண்டல் காடு ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 பேர் நேற்று (30) கைது செய்யப்பட்டுள்ளனர்

இவர்கள் 04 உழவு இயந்திரங்கள் மற்றும் ஒரு டிப்பர் ரக வாகனத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக் கொண்டிருந்த போது பொலிஸாரு கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


குறித்த இச் சம்பவம் தொடர்பில் கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்சந்தேகநபர்களையும், கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரங்கள் மற்றும் டிப்பர் ரக வாகனத்தையும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்திற்கு ஆஜர்படுத்துவதற்காக பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதியின் நஞ்சுத்தன்மையற்ற நாடு திட்டத்தின்கீழ் மட்டு.மாவட்டத்தில் 1580 ஏக்கரில் நிலக்கடலை செய்கை

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

ஜனாபதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின்கீழ் நஞ்சற்ற நாடு எனும் எனும் தொனிப் பொருளில் சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி மரக்கறி மற்றும் விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருதாக மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 1580 ஏக்கரில் இம் முறை நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறித்த திணைக்களத்தின் புள்ளி விபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இம் மாவட்டத்தின் பிரதான மேட்டு நிலப் பயிர்ச் செய்கையான நிலக்கடலை உற்பத்தியில் பெருமளவிலான விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்டத்தின் பெரும்பாலான விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் நிலக்கடலை விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# இரண்டரை வயது ஆண் குழந்தை கழிவு குழிக்குள் வீழ்ந்து பரிதாபகரமாக பலி

(க.கிஷாந்தன்)



இரண்டரை வயது ஆண் குழந்தையொன்று கழிவு குழிக்குள் வீழ்ந்து பரிதாபகரமாக பலியான பெருந்துயர் சம்பவமொன்று மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுன்ஸ் வீக் தோட்டத்தில் ஜனதா டிவிசனில் இடம்பெற்றுள்ளது.

ஜெயசுந்தரம் சுலக்ஷனன் என்ற குழந்தையே இவ்வாறு பலியாகியுள்ளது.குழந்தை திடீரன நேற்று மாலை முதல் காணாமல்போனதையடுத்து, அக்குழந்தையை தேடும் பணி இடம்பெற்றது. இதன்போது வீட்டுக்கு அருகில் பாதுகாப்பற்ற நிலையில் இருந்த சாணிக் குழியில் இருந்து குழந்தை சடலமாக மீட்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மஸ்கெலியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

குழந்தையின் தாய் குருணாகல் பகுதியிலுள்ள வீடொன்றில் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில் புரிகின்றார் எனவும், தந்தையின் அரவணைப்பிலேயே குழந்தை வளர்ந்துள்ளது எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். இச்சம்பவமானது மஸ்கெலியா தோட்டப்பகுதியையே பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# பால்,சேதன பசளை உற்பத்திக்கான வளங்களை கொண்ட கிழக்கு மாகாணம்

## இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத்

(எப்.முபாரக்)

நாட்டின் பால் உற்பத்தி தேவையை பூர்த்தி செய்வதற்கும், சேதனப் பசளையை உற்பத்தி செய்வதற்கும் அனைத்து வளங்களையும் கிழக்கு மாகாணம் பெற்றிருக்கின்றது என கால் நடை வளர்ப்பு, பண்ணைகள் மேம்பாடு,பால் மற்றும் சார் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்தார்.

''பால் உற்பத்தியும் நிலையான அபிவிருத்தியும்'' எனும் தொனிப்பொருளில் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

திருகோணமலை மாவட்ட செயலாளர் சமன் பாண்டிக் கோரளயின் வழிகாட்டலின் கீழ், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யஹம்பத் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முட்டை, இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்திருக்கிறது.

இந்தநிலையில் பால் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைவதற்கு தேவையான அனைத்து வளங்களையும் கிழக்கு மாகாணம் கொண்டிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் அதிகமான மாடுகள் நன்கு திட்டமிட்டு வளர்க்கப்படாமல் திறந்தவெளியில் போதிய பராமரிப்பில்லாமல் உள்ளதனால் , மாடுகளில் இருந்து, வினைத்திறனான உற்பத்திகளை பெற முடியாமல் இருப்பதாகவும் அதனால் ஒரு சிறந்த ஒழுங்கமைக்கப்பட்ட பண்ணை முறை அவசியம் என கிழக்கு ஆளுநர் என்னை சந்திக்கும்போது தெரிவித்ததாக அமைச்சர் கூறினார்.

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கு கால்நடை அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும்



நிதியில் அதிகமான பணத்தை வடமாகாணம் மாத்திரமே செலவு செய்கின்றது. அதே சமயத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அதற்கு ஈடாக தற்போது அதிகமான கரிசனை எடுத்து கால்நடை உற்பத்தியை கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்வதற்காக முயற்சி மேற்கொண்டு வருவது மிகுந்த சந்தோஷத்தை தருகின்றது என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், நாட்டில் அன்னளவாக 1.2 மில்லியன் பசுக்கள் உண்டு. சராசரியாக ஒரு பசுவில் இருந்து 2.8 க்கும் 3 லீற்றருக்கு இடைப்பட்ட பாலையே பெறுகின்றோம்.

இந்த உற்பத்தியை இரண்டு மடங்காகப் மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்ற நேரத்தில் கொரோனா சவாலை எதிர்நோக்க வேண்டியிருந்தது இருந்தாலும் இது ஒரு தேசிய வேலைத்திட்டம் என்ற படியால் நாங்கள் கொரோனா சவால்களுக்கு முகம் கொடுத்தும் இதனை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றோம்.

எங்களுடைய இந்த திட்டம் நிறைவேறும் போதும் காலையிலும் மாலையிலும் இரண்டு தடவைகள் பாலைப் பெற்று இரண்டு மடங்காக பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என நினைக்கிறேன்.

நமது நாட்டில் திட்டமிடப்படாது பாரம்பரியமான முறையில் தான் இன்றும் மாடுகள் வளர்க்கப்படுகின்றன. கால்நடைகள் சரியாக கட்டமைப்பு ரீதியாக திட்டமிட்டு வளர்க்கும் போது பால் உற்பத்தியை அதிகரிப்பது மாத்திரமன்றி, ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ள சேதனப் பசளை உற்பத்தியையும் அதிகரிக்க முடியும். பண்ணையாளர்களுக்கு அது தொடர்பான விழிப்புணர்வை மேலும் ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் மாதமொன்றுக்கு 5000 மெட்ரிக் தொன் கால் நடை கழிப்பொருட்கள் சேருவதாக தகவல்கள் தெரிவக்கின்றன. எனவே, ஒரு முறையான கட்டமைப்பு ரீதியான கால்நடை வளர்ப்பு இடம்பெறும் போது, சேதனப் பசளை உற்பத்தியிலும் கிழக்குமாகாணம் நாட்டின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு பிரதான பங்கு வகிக்க முடியும்.

சேதனப் பசளை உற்பத்தியை கால்நடை வளர்ப்பாளர்கள் உற்பத்தி செய்ய முடியும் உற்பத்தி செய்வதற்காக வேண்டிய சகல வசதிகளையும் அரசாங்கம் பெற்றுக் கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றது. அவர்களால் அது முடியாது விட்டால் கால்நடையில் இருந்து பெறப்படுகின்ற கழிவுகளை விவசாய அமைச்சின் வழிகாட்டுதலுடன் அதனை அவர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கும் திட்டங்களை வகுத்து வருகின்றது.

சேதனப்பசளை விவசாயம் மூலம் மக்களை பல்வேறு வகையான நோய்களிலிருந்து பாதுகாக்க முடியும்.இன்று அதிகமான மக்கள் சிறுநீரக நோய்க்கு உட்பட காரணம் இரசாயன முறையிலான விவசாயமே.எனவே ஆரோக்கியமான சமூகமொன்றை கட்டியெழுப்ப சேதன முறையிலான விவசாயம் தேவைப்படுவதாகவும் எனவேதான் அரசாங்கம் மக்கள் நலன்கருதி இவ் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

இக்கலந்துலையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ,கால்நடை வளர்ப்பு,பண்ணைகள் மேம்பாடு பால் மற்றும் முட்டைசார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ். சேனாநாயக்க, திணைக்களதலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் உப்புவெளி பண்ணையையும் அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

# நிவாரண உதவிகள் வழங்கல்



(ந.குகதர்சன்)

நாடளாவிய ரீதியில் கொவிட் 19 தொற்று காரணமாக ஏற்படுத்தப்பட்டிருந்த பிரயாணத்தடையால் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வாழ்வாதரத்தை இழந்த மக்களுக்கு பல்வேறுபட்ட அமைப்புக்களால் நிவாரண உதவிகள் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கனடிய தளிர் ஊடகம் மற்றும் சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

கழகத்தின் நிதி பொறுப்பாளரும் மாவட்ட கிளைதலைவருமான சி.தமிழினி தலைமையில் கழகத்தின் கல்குடா கிளை பொறுப்பாளரும் ஊடகவியலாளருமான ந.குகதர்சன் மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குறித்த சில பிரதேச வாழ் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர். சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் மட்டக்களப்பு கிளையினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கனடாவில் நீண்டகாலமாக வாழ்ந்து வரும் வீடு விற்பனை முகவர் கென் கிருபாவின் பிறந்த நாள் அன்பளிப்பு நிதி மற்றும் தொழில் அதிபர்களான தாஸ் சன்முகலிங்கம், கனகாம்பிகை நகை மாளிகை கோபால் நடா, மற்றும் கென்வேஸ் நிறுவனத்தின் உரிமையாளரான லோகன் ராசையா வீடு விற்பனை முகவர் ராஜ்குமார் ராசையா ஆகியோரால் நாடளாவிய ரீதியில் கொவிட் 19 தொற்று காரணமாக ஏற்படுத்தப்பட்டிருந்த பிரயாணத்தடையால் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வாழ்வாதரத்தை இழந்த மக்களுக்கு இவ் நிவாரண உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வானது இன்றும் தொடராக நல் உள்ளங்களின் ஆதரவுடன் இடம் பெற்று வருகின்றது.

# இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய தலைவராக ஜஸ்வர் உமர் தெரிவு

(யூ.கே. காலித்தீன்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய தலைவராக ஜஸ்வர் உமர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய தலைவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.



இதன்போது, 96 வாக்குகளைப் பெற்று ஜஸ்வர் உமர், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, குறித்த பதவிக்கு ஜஸ்வர் உமருடன் எதிர்த்து போட்டியிட்ட கலாநிதி மனில் பெர்ணான்டோ 90 வாக்குகளை மாத்திரமே பெற்றார்.

இதற்கு முன்னர் ஐந்து வருடங்களாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி, ஆகிய பதவிகளில் ஜஸ்வர் உமர் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது

## யாழ்.இந்துக் கல்லூரி மாணவனின் சாதனை

இணையான புதிய வகை செயலி ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

mSQUAD என்ற செயலி தொலைத் தொடர்பாடல் துறையில் ஒரு முக்கியமான செயலியாக தற்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

சிறுவயதில் இருந்தே மென்பொருள் விஞ்ஞானியாக வர வேண்டும் என்று தனது கல்வியைத் தொடர்ந்த இந்த மாணவன் கடந்த ஒரு மாத காலமாக நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த பயணத் தடையினை சிறந்த முறையில் பயன்படுத்தி வீட்டில் இருந்து இந்த புதிய செயலியை கண்டுபிடித்துள்ளார். மிகத்துல்லியமான முறையில் படங்கள் மற்றும் வீடியோக்கள் மற்றும் தரவுகளை இதனூடாக நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என்பதுடன் இந்த செயலி மிகவும் அதிவிரைவு தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

60 MB அளவு மெகாபைட் கொண்ட இந்த மென்பொருளினை இணைய உலாவிகள் பிளேஸ்டோர் மூலமும் தரவிற்றம் செய்து கொள்ள முடியும்.

குறித்த மென்பொருளை இதுவரை ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பதிவிறக்கம் செய்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் தீவிரமடையும் கொரோனா அலை

தளர்த்தப்பட்டாலும் கிழக்கில் உக்கிரமடைந்து வரும் கொரோனா அலையை கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் உள்ளூர் மற்றும் பிரதான வீதிகளில் களப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.

மக்களின் சுகாதார நலன்கருதி சந்தைகள், பொது இடங்கள் மற்றும் பொது வீதிகள் போன்ற இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு மேற்பார்வை குழு நியமிக்கப்பட்டு களச் செயற்பாடுகள் நாளந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இக்களப்பணிக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி குழுவும் கலந்து கொண்டு சுகாதார வழிமுறைகளை கண்காணித்து வருகின்றனர்.






# கொரோனா நோயாளர் விடுதிகள் நிந்தவூர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் திறப்பு!



(பாறுக் ஷிஹான்)

கொரோனா நோயாளர் விடுதிகள் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைகளில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் விடுதி நேற்று (30) பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமினால் திறந்து வைக்கப்பட்டது.

எமது பிரதேசத்தில் கோரோனா தெற்றுக்குள்ளாகும் நோயாளர்களுக்கு நிந்தவூர் கோரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறும் வசதிகளை பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்படுத்தி தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி ஷகிலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பு.சுகுணன், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் உதவிப்பணிப்பாளர், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். பறூசா நக்பர் மற்றும் நிந்தவூர் ஜூம்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் பாருக் இப்றாஹீம் அவர்களும் மேலும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இதே வேளை நேற்று கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சம்மாந்துறை வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட கொரோனா நோயாளர்களுக்கான அதி தீவிர கண்காணிப்பு பிரிவும் மற்றும் பிரத்தியேக விடுதியும் வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் அஸாத் எம் ஹனிபா தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நோயாளர் விடுதி திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கு. சுகுணன் விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டால் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட இந்த விடுதியில் அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இ.கி.மிசன் அம்பாறை மாவட்டத்தில் 600 உலருணவுப் பொதிகள் விநியோகம்!

(வி.சுகிர்தகுமார்)



(வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஸ்ணமிசனின் மட்டு.மாநிலக்கிளை அம்பாறை மாவட்டத்தில் கொடிய கொரோனாவால் வாழ்வாதாரத்தையிழந்த நான்கு பிரதேசங்களைச்சேர்ந்த 600குடும்பங்களுக்கு ஒரு தொகுதி உலருணவு நிவாரணங்களை வழங்கிவைத்தது.

நாவிதன்வெளி பொத்துவில் ஆலையடிவேம்பு சம்மாந்துறை ஆகிய நான்கு பிரதேசங்களைச்சேர்ந்த 600குடும்பங்களுக்கு தலா 150பொதிகள் வீதம் நேற்று விநியோகிக்கப்பட்டன.

மட்டு.இ.கி.மிசன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா ஜீ தலைமையில் இவ்வுலருணவு விநியோகம் இடம்பெற்றது. உதவி மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ நெறிப்படுத்தலில் இவை வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் நாவிதன்வெளி பிரதேசசெயலாளர் என். ரங்கநாதன் ஆகியோரும் கலந்துகொண்டு அவற்றை வழங்கிவைத்தனர்.

இதேவேளை மட். திராய்மடுவிலும் 80பொதிகளை சுவாமி நீலமாதவானந்தாஜீ வழங்கிவைத்தார்.

# அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் அரசின் நடவடிக்கையில் திருப்தியில்லை!

: அரசின் பங்காளி கட்சியான இலங்கை மக்கள் தேசிய கட்சி கவலை!!




(நூருல் ஹுதா உமர்)

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுஜன கூட்டணியில் நாற்பது கட்சிகள் இணைந்து ஒப்பந்தம் செய்திருந்தோம். அப்போது எங்களுடன் சிறந்த புரிந்துணர்வுடன் நடந்து கொண்டவரே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனாவின் தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ஸ அந்த காலப்பகுதியில் எங்களுடனான பேச்சுவார்த்தைகளின் போது அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தினோம். அது இப்போது சாத்தியமாகியுள்ளது. பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஷ ில் ராஜபக்ஸ சிறந்த நிர்வாகி அவர் விரைவில் பாராளுமன்ற உறுப்பினராக மாறி அதனுடாக அமைச்சு பதவியையும் பெற்று நாட்டின் சகல பாகங்களுக்கும் சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டும். அதுவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும் என இலங்கை மக்கள் தேசிய கட்சியின் தலைவர் நாகராசா விஸ்ணுகாந்தன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளி கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பு கல்முனையில் (29) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

எரிபொருளின் விலையேற்றத்தை தீர்மானிப்பது அரசாங்கமில்லை. சர்வதேச விலைச்சுட்டியை அடிப்படையாக கொண்டே எரிபொருள் விலையேற்றம், விலையிறக்கம் தீர்மானிக்கப்படுகிறது. விலையேற்றத்தை சுட்டிக்காட்டி கோத்தாபய அரசை கலைக்க கோருபவர்கள் யாரை ஆட்சிப்பீடம் ஏற்ற முனைகிறார்கள். அமைச்சர் உதய கம்பன்வில நாட்டை நேசிக்கும் சிறந்த அரசியல்வாதி. இந்த விலையேற்றத்தினுடாக கிடைக்கும் பணங்களை யாரும் வெளிநாட்டுக்கு கொண்டுசெல்வதில்லை. எமது நாட்டுக்குள்ளையே அது சுற்றிக்கொண்டிருக்கிறது. இதற்காக அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாட்டுவண்டி சவாரி செய்வது தீப்பந்தம் ஏந்துவதெல்லாம் முறையாகாது. காலாகாலத்திற்கும் வரும் சகல எதிர்க்கட்சிகளும் இதைத்தான் செய்கிறார்கள்.

எங்களின் அரசாங்கம் அரசியல்கைதிகளை விடுதலை செய்த விடயத்தில் மகிழ்ச்சியாக இருந்தாலும் எங்களுக்கு பூரண திருப்தியில்லை. அரசியல் கைதியாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுதாகரன் அவரது பிள்ளைகளின் எதிர்காலம் கருதி இம்முறை விடுதலை செய்யப்படுவார் என எல்லோரும் எதிர்பார்த்திருந்த நிலையில் அந்த எதிர்பார்ப்பு பொய்யாகியுள்ளது. அவரது மனைவி இறந்துள்ள நிலையில் பாட்டியிடம் வளர்ந்துவரும் சிறுபிள்ளைகளின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு அவரை விடுதலை செய்ய அரசாங்கம் முன்வர வேண்டும். சுதாகரன் போல பல்வேறு கதைகளை உடைய பல அரசியல் கைதிகளும் சிறையில் வாடுகிறார்கள் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.

# கிழக்கில் மூடப்பட்ட ச.தொ.ச. கிளைகளை மீளவும் திறக்குமாறு நிந்தவூர் பிரதேச சபையில் தீர்மானம்!

(ஏ.எல்.எம்.சலீம்)

கடந்த நல்லாட்சி காலத்திலும் அதற்கு முன்னரான காலப்பகுதியிலிருந்தும் கிழக்கின் பல பாகங்களிலும் இயங்கிவந்து இன்றைய பொது ஜனபெமுன அரசு ஆட்சிக்கு வந்ததும் மூடப்பட்ட லங்கா ச.தொ.ச. கிளைகளை மக்கள் நலன்கருதி மீளவும் திறந்து செயற்படவைக்க ஆவன செய்யப்படவேண்டும்

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று நிந்தவூர் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. நிந்தவூர் பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்களுக்கான 4 ஆவது சபையின் 39 ஆவது அமர்வு தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர் தலைமையில், சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வின் போது மேற்படி தீர்மானம் தொடர்பான பிரேரணையை சபை உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எல்.றியாஸ் ஆதம் சபையில் முன்மொழிந்ததுடன். ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

பிரரேரணையை சபையில் முன்மொழிந்து உறுப்பினர் சட்டத்திரணி ஏ.எல்.றியாஸ் ஆதம் உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார். நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் அனர்த்த இடர் காலத்திலும், முடக்க நிலைமைகளின் போதும் மக்கள் அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி, நியாய விலைகளில் பெற்றுக்கொள்வதற்கு லங்கா ச.தொ.ச கிளைகளின் பங்களிப்பும், சேவைகளும் குறிப்பிடத்தக்கனவாக அமைந்துள்ளன.



ஆனால் இன்றைய அரசு ஆட்சிக்கு வந்ததும் கிழக்கில் இயங்கி வந்த பல லங்கா ச.தொ.ச. கிளைகள் இழுத்து மூடப்பட்டன.

பலவருட காலமாக இயங்கி வந்த லங்கா ச.தொ.ச வின் நிந்தவூர்கிளை உட்பட, அம்பாறை மாவட்டத்தில் இயங்கிய அட்டாளைச்சேனை, பாலமுனை, சென்ரல் கேம்ப், சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை, நற்பிட்டிமுனை லங்கா ச.தொ.ச கிளைகளும் இழுத்து மூடப்பட்டுள்ளன.

இதே போல் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் நல்லாட்சி அரசில் மக்கள் நலன் கருதித் திறந்து வைக்கப்பட்டு இயங்கிய பல லங்கா ச.தொ.ச கிளைகளும் மூடப்பட்டுள்ளன. இதனால் மெற்படி பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் இன்றைய இக்கட்டான கால கட்டத்தில்கூட லங்கா ச.தொ.ச. மூலம் அதன் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

லங்கா ச.தொ.ச. வினூடான மக்கள் சேவையுணர்ந்த அரசு ச.தொ.ச. வின் சேவைகளை அத்தியாவசிய சேவையாகவும் அண்மையில் பிரகடனம் செய்து வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது. எனவே பாமர மக்களின் நலன் கருதி கிழக்கில் மூடப்பட்ட லங்கா ச.தொ.ச. கிளைகளை மீளவும் திறக்க அரசு தாமதமின்றி ஆவன செய்ய வேண்டும்.

குறிப்பாக பல வருடங்களாக இயங்கி வந்து மூடப்பட்ட எமது நிந்தவூர் லங்கா ச.தொ.ச கிளையை உடன் மீளத்திறந்து மக்களுக்கு சேவையாற்ற ஆவன செய்யப்பட வேண்டும் என்றார்.

பிரேரணை மீது தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் உரையாற்றுகையில்,

நிந்தவூரில் இயங்கிவந்த லங்கா ச.தொ.ச. கிளை பல வருடங்களுக்கு முன்பிருந்தே மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றிவந்தது. முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவந்த நிந்தவூர்க்கிளை நல்லாட்சி அரசில் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனால் புனரமைக்கப்பட்டு, நவீனமயப்படுத்தப்பட்டதாக இயங்கியது. ஆனால் இக்கிளையைக்கூட இன்றைய அரசு மூடியமை பெரும் மனவருத்தத்திற்குரியதாகும்.

சுமார் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பயனடைந்த நிந்தவூர் லங்கா ச.தொ.ச கிளை உட்பட, கிழக்கில் இன்றைய அரசு ஆட்சி பீடம் ஏறியதும் இழுத்து மூடிய சகல கிளைகளையும் மீளவும் திறந்து மக்களுக்கு சேவையாற்ற அரசு ஆவன செய்ய வேண்டும் என்றார்.

பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளராக ஜாபீர் நியமனம்!

(யூ.கே. காலித்தீன்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றி வரும் ஆதம்பாவா அப்துல் ஜாபீர் கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான (கடமை நிறைவேற்று) பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாணத்திற்கு முதன்முதலாக இப்பதவிக்கு நியமிக்கப்படும் அதிகாரியும் இவராவார்.

2010ம் ஆண்டு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் உதவிப் பணிப்பாளராக இணைந்து கொண்ட ஜாபீர் பின்னா 2020ம் ஆண்டு பிரதிப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றார்.

இதுவரை மேற்படி அதிகாரசபையின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும், தலைமை அலுவலகத்திலும் கடமையாற்றியுள்ள இவர் தற்போது அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளராக பணிபுரிகின்ற இந்நிலையிலேயே தற்போதைய கடமைக்கு மேலதிகமாக மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.



சாய்ந்தமருதைச் சேர்ந்த ஏ.ஏ. ஜாபீர், கல்முனை சாஹிரா கல்லூரியின் பழைய மாணவரும் பேராதனை பல்கலைக்கழக விவசாய விஞ்ஞான பட்டதாரியாவர். அத்துடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவனத்தில் பொது நிர்வாகத் துறையில் முதுமானிப் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.